# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

AIBEA - AIUBEA உடன் இணைக்கப்பட்டது

சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை - 600 001

தொலை பேசி : **044-25358718, 9444058718, 9677048718** மின்அஞ்சல் : **ubeutn@gmail.com**


சுற்றறிக்கை எண்:153:2019 03.10.2019

அன்பார்ந்த தோழர்களே !

## பொதுத்துறை வங்கிகள் இணைப்பை எதிர்த்து அகில இந்திய வேலைநிறுத்தம் - 22.10.2019

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கமும் (AIBEA), இந்திய வங்கி ஊழியர் கூட்டமைப்பும் (BEFI) இணைந்து பொதுத்துறை வங்கிகள் இணைப்பை எதிர்த்து வரும் 22.10.2019 அன்று ஒரு நாள் வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளன.

கடந்த ஆகஸ்ட் 30ஆம் நாள், மத்திய நிதியமைச்சர் அவர்கள் 10 பொதுத்துறை வங்கிகளை ஒன்றிணைத்து 4 வங்கிகளாக்கும் முடிவை அறிவித்தார். இதன்படி, ஆந்திரா வங்கி, கார்பொரேஷன் வங்கிகள் யூனியன் வங்கியுடன் இணைக்கப்படும். அலகாபாத் வங்கி இந்தியன் வங்கியுடனும், சிண்டிகேட் வங்கி கனரா வங்கியுடனும், ஓரியண்டல் வங்கியும், யுனைட்டட் வங்கியும் பஞ்சாப் நேஷனல் வங்கியுடனும் இணைக்கப்படும்.

இந்திய வங்கி தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பில், வங்கிகள் இணைப்புக்கு எதிராக வேலைநிறுத்தம் நடத்திட கருத்தொற்றுமை காணப்படாததால், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கமும், இந்திய வங்கி ஊழியர் கூட்டமைப்பும் இணைந்து பொதுத்துறை வங்கிகள் இணைப்பை எதிர்த்து வரும் 22.10.2019 அன்று ஒரு நாள் வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளன.

பொதுத்துறை வங்கிகள் இணைப்பு தேவையற்ற ஒன்று என்பது அனைவருக்கும் தெரியும். இந்தியாவின் பல கிராமங்களுக்கு இன்னும் வங்கிச் சேவை சென்றடையவில்லை. இன்று வங்கிகளின் முக்கிய பிரச்சனை வராக்கடன்கள் தான். இணைப்பினால் இந்தப் பிரச்சனையைத் தீர்க்க இயலுமா ?

வங்கிகள் இணைப்பின் காரணமாக பல கிளைகள், அலுவலகங்கள் மூடப்படும். பல ஊழியர்கள் உபரியாக்கப்பட்டு அவர்களுக்கு விருப்ப ஓய்வு வழங்கப்படும். கிளை மூடல்கள் காரணமாக, பல ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்படுவார்கள். இணைக்கப்பட்ட வங்கிகள் பின்னர் தனியார்மயமாக்கப்படும் அபாயமும் உள்ளது.

## முன் தயாரிப்பு நிகழ்வுகள் :

| | |
|---|---|
| 04.10.2019 | அனைத்து நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் |
| 14.10.2019 | தார்ணா போராட்டம் - மும்பை, புது தில்லி, கொல்கட்டா, சென்னை, பெங்களூரு, ஹைதராபாத், மங்களூர் நகரங்களில். |
| 22.10.2019 | **முழு நாள் வேலைநிறுத்தம்.** |

வழக்கம்போல, யூனியன் வங்கியிலுள்ள நமது தோழர்கள் அனைவரும், உணர்வுப்பூர்வமாக இந்தத் தயாரிப்பு நிகழ்வுகளிலும், 22.10.2019 முழு நாள் வேலைநிறுத்தத்திலும் கலந்துகொண்டு, இந்த வேலைநிறுத்தம் வெற்றிபெறச் செய்திட வேண்டுகிறோம்.

## ஊதிய உயர்வு முன்பணம் :

கடந்த 01.10.2019 அன்று இந்திய வங்கிகள் சங்கம், அனைத்து வங்கிகளுக்கும் விடுத்துள்ள சுற்றறிக்கையில், ஊழியர்கள்/அதிகாரிகள் தீபாவளி பண்டிகையை சிறப்பாக கொண்டாடிட அனைவருக்கு ஒரு மாத ஊதியத்தை ஊதிய உயர்வு முன்பணமாக வழங்கிட உத்தரவிட்டுள்ளது.

11வது இருதரப்பு ஒப்பந்த பேச்சுவார்த்தை 01.11.2017 முதல் துவக்கப்பட்டு நடைபெற்றுவரும் சூழலில், விரைந்து பேச்சுவார்த்தையை முடிப்பதற்கு பதிலாக, முன்பணம் வழங்கிட முன்வந்துள்ளது, பேச்சுவார்த்தை மற்றும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்கங்களை கேவலப்படுத்தும் நோக்கத்திலுள்ளதாக தொழிற்சங்கங்கள் கருதுகின்றன. இந்திய வங்கிகள் சங்கம் ஊதிய உயர்வு முன்பணம் குறித்து தொழிற்சங்கங்களுடன் பேசாமல் தன்னிச்சையாக முடிவெடுத்துள்ளது கடும் கண்டனத்துக்குரியது.

தனது கண்டனத்தை தெரிவிக்கும் வகையில், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் இன்று இந்திய வங்கிகள் சங்கத்திற்கு கடிதம் எழுதியுள்ளது.

தோழமை வாழ்த்துகளுடன்,

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**